**மொனராகலை பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 05 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 24 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மொனராகலை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 150,000 தொகையான கட்டிட திட்ட செயன்முறைக் கட்டணம் வருமானமாக கணக்கீடு செய்யப்படாமல் வைப்புக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்வரும் ஆண்டின்போது சரியான வழிமுறைகளை மேற்கொண்டு சரியாக கணக்கீடு செய்யப்படும். |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 107,335 தொகையான மீண்டெழும் செலவினம் கணக்கீடு செய்யப்படாதிருந்ததினால் செலுத்த வேண்டிய செலவினம் மற்றும் ஆண்டின் செலவினம் என்பன அப்பெறுமதியால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். |

## (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலைமைக் கூற்றில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 4,872,912 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மீதியை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம் அந்த மீதி ரூபா 67,611,000 ஆனமையால் ரூபா 62,738,088 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | பதிவேடுகள் மற்றும் பட்டோலை நாளதுவரையாக்கப் பட்டு இணங்காமை களுக்கான காரணங்களைக் கண்டறிந்து சரிசெய்யப்பட வேண்டும். | பல வருட காலமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த மீதியாக இருந்தமையால் அதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பட்டோலையொன்றோ அல்லது காலப்பகுப்பாய்வொன்றோ காணப்படாதிருந்ததுடன் 2019.02.25 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து பெறப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம் செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் வட்டி ரூபா 67,611,000 ஆக இருந்தது. இந்தப் பெறுமதியை உள்ளடக்கிய வட்டியை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## (இ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 26,598,993 தொகையான 03 சொத்து விடயங்களுக்குரிய மீதிகளை உறுதிப்படுத்துதல், உடன்படிக்கைப் பத்திரம், பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு மற்றும் ரூபா 4,872,912 தொகையான பொறுப்பு விடயங்களுக்குரியதாக நாளதுவரையாக்கப்பட்ட பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு என்பன சமர்ப்பிக்கப்படாமை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அறவிடுவதற்குக் காணப்படுகின்ற வேலைகளை பதிவழிப்பதற்கு விடயப் பொறுப்பு அமைச்சருக்கு ஆவணங்கள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் நிலுவையாக இருந்த ஏனைய வருமானம் இறுதிக் கணக்கில் பதிவழிப்பதற்குத் தேவையான செயல்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. காலப்பகுப்பாய்வு தற்போது தயாரிக்கப்படுகின்றது. தீர்க்கப்பட வேண்டிய மீதிகள் எதிர்வரும் வருடத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் |

தற்போது ரூபா 2,320,000 தொகை செலுத்தப்பட்டுள்ளது.

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 126(vii)(ஏ) | உப விதியொன்றை தயாரித்து மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடங்களிலிருந்து கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உப விதிகளைத் தயாரித்து கட்டணம் அறவிடப்பட வேண்டும். | உப விதியின் வரைவொன்று தயாரிக்கப் பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ii) | 136 ஆம் பிரிவு | வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள 139 கடைகளின் வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு அந்த மதிப்பீட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை அறவிடப்பட வேண்டும். | 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டதுடன் புதிய மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்க வேண்டியுள்ளது. |
| (iii) | 139 ஆம் பிரிவு | ஆதனவரி அறவிடக்கூடிய எல்லைக்குள் அமைந்துள்ள வரி அறவிட முடியுமான சகல ஆதனங்களும் இனங்காணப்பட்டு மதிப்பீடு செய்யும் பணிக்கான தவணை அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களை இனங்கண்டு மதிப்பீடு செய்யும் பணிக்காக தவணை அறிக்கை கோரப்பட வேண்டும். | சகல ஆதனங்களுக்காகவும் தவணை அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு அங்கீகாரம் கிடைக்காதிருந்ததுடன் புதிய நிர்மாணத்திற்காக தற்காலிக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 149 ஆம் பிரிவு | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள அல்லது அந்த சபை அங்கீகரித்துள்ள சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற ஹோட்டல் மற்றும் 04 தங்குமிடங்களில் இருந்து கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் மற்றும் தங்குமிடங்களின் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டிருந்த துடன் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வருமானப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>------------------------------ | | | |
| | XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற சபையில் சேவையாற்றுகின்ற 08 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 260,307 கூட்டுத்தொகையான ஊழியர் கடன் அறவிடப்பட்டிருக்க வில்லை | அறவிட வேண்டிய ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தகவல் கண்டறியக் கூடிய உத்தியோகத்தர் களுக்கு அறிவிக்கப் பட்டிருந்ததுடன் தகவல்களை கண்டறிந்து கொள்ள முடியாத ஏனைய மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | 2015 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட 56 கட்டிடத் திட்டங்களுக்குரிய நிர்மாணங்களைப் பரீட்சித்து தரச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. | நிர்மாணங்களை பௌதீக ரீதியில் பரீட்சித்து வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக கட்டிடத்தை தற்காலிகமாக மதிப்பீடு செய்யும் போது வருமானப் பரிசோதகர் மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடத் திட்டத்தை அங்கீகரித்து நிர்மாணிக்கப்பட்டுள்ள கசலருக்கும் தரச் சான்றிதழ் பெற்றுகொள்ளுமாறு அறிவிக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,289,271 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,853,827 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 12,869,609 | 11,970,956 | 6,227,817 | 5,743,139 | 13,226,173 | 11,945,130 | 5,138,154 | 6,806,978 |
| (ii) | வாடகை | 12,583,950 | 2,610,077 | 2,608,135 | 1,942 | 16,385,419 | 2,531,500 | 2,506,583 | 24,917 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,045,100 | 1,353,900 | 1,359,900 | - | 960,200 | 1,263,850 | 1,263,850 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,089,000 | - | 20,405,302 | - | 9,988,000 | - | 16,458,842 | - |
| | மொத்தம் | 27,587,659 | 15,934,933 | 30,601,154 | 5,745,081 | 40,559,792 | 15,740,480 | 25,367,429 | 6,831,895 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 15,934,933 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 5,745,081 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 36 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வாடகை அறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு முறையான நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 11,970,955 தொகையான ஆதனவரி வருமானத்தில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,957,879 தொகை சேகரிக்கப்படாதிருந்ததுடன் அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 41 சதவீதம் ஆகும். | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | நிலுவைப் பணத்தை செலுத்தி முடிவுறுத்துமாறு உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 18,653,059 தொகையான நிலுவை ஆதனவரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 11,385,191 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அது அறவிடப்படாமல் நிதியாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவையில் 61 சதவீதம் ஆகும். | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | இந்த நிலுவையை அறவிடுவதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 10,000 தொகைக்கு மேற்பட்ட நிலுவை ஆதனவரி அலகுகள் 159 இலிருந்து அறவிடவேண்டிய பணம் ரூபா 12,743,412 ஆகும். | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டு ஆதனங்களுக்கு தடை மேற்கொள்வதுடன் 06 ஆதனவரி பகுதிகளை மேவுகை செய்யும் வகையில் நடமாடும் சேவை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.4 வாகனங்களை வாடகைக்கு விடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய மோட்டார் கிறேடரை வாடகைக்கு வழங்குவதற்காக 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 66,220 தொகையும், 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 5,000 தொகையுமாக அறவிட வேண்டிய ரூபா 71,220 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவைப் பணம் அறவிடப்பட வேண்டும். | அறவிடமுடியாதுள்ள பணத்தைப் பதிவழிப்பதற்கு விடயப்பொறுப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் மிகுதி நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

### 2.2.5 ஜீலோன்கந்த நீர் செயற்திட்டத்தின் நீர்க்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாமல் காணப்படுகின்ற ரூபா 824,950 தொகையான நிலுவை நீர்க் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர்க்கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வருமானப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,936,443 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 20,734,328 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | இந்தப் பணத்தை வழங்குமாறு உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்படும். |

### 2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட மிகைக் கட்டணம் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய தொகை ரூபா 989,893 ஆகும். | உரிய தரப்பினரிடமிருந்து மிகைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | மரணமடைந்த நபர்களுக்காக மிகைக் கட்டணத்தை விடுவித்துக் கொள்வதற்கும் மிகுதிப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 07 விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்படவில்லை. | உப விதிகள் விதிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | முன்னுரிமை காரணங்களுக்காக எதிர்காலத்தில் உப விதிகள் தயாரிக்கப்படும். |

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் ஆண்டில் அடைந்து கொள்வதற்கு தேவையான நோக்கங்கள் மற்றும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்த்த செயற்பாடுகள் கண்டறியப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதனால் வருடாந்த செயலாற்றலை மதிப்பீடு செய்யும் இயலுமை இழக்கப்பட்டிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்பட்ட நட்டத்தை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | இலக்கு குறைவு மற்றும் அதிகரித்த நிலைகளை தற்போது அடைந்துகொள்வதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நகரின் சகல வாகனம் நிறுத்தி வைக்கும் இடம் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடங்கள் தொடர்பாக இனங்காணப் பட்டுள்ளது. |
| (ஆ) | ஆதனவரி அறவிடுவதற்கு பொருத்தமான பிரதேசங்கள் 2011 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டிருந்த போதும், முன்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி அறவிடுவதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | அபிவிருத்தி யடைந்த பிரதேசங்கள் முன்னரே இனங்காணப்பட்டு ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | நகர அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதுடன் அபிவிருத்தியடைந்த கிராமப் பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி அறவிடுவதற்கு வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படும். |
| (இ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் பல்வேறு நிறுவனங்களினாலும் நபர்களினாலும் மீளாய்வாண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட சகல நிரந்தர விளம்பர | சபை அதிகாரப் பிரதேசத்தை மேவுகை செய்யும் வகையில் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். | பிரதான வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள பதாதைகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் பதாதைகளைப் பொருத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அறிவித்தல் பதாதைகளை மேவுகை செய்யும் வகையில் முழுமையான மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | | எதிர்பார்க்கப்பட்ட அறவீடுகளைக் கோரி விடுவிக்கக்கூடிய தொகைக் கட்டணங்களில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. எஞ்சியவர்களிடமிருந்து பணம் அறவிடப்பட்டது. எதிர்காலத்திலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) (i) | சபையினால் பராமரித்துச் செல்லப்படுகின்ற வீதி விளக்குகளின் எண்ணிக்கை, அவை அமைந்துள்ள இடம் போன்றவற்றை இனங்காண்பதற்காக 2016 யூலை 18 ஆந் திகதியின் பின்னர் வீதி விளக்குகளின் புள்ளிவிபரங்கள் எடுக்கப்படாதிருந்ததுடன் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள இடங்களை சரியாக இனங்காண்பதற்காக வீதி விளக்கு பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக வீதி விளக்குகளின் எண்ணிக்கையினை கண்டறிந்து வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள இடங்கள் இனங்காணப்பட வேண்டியிருந்த துடன் பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணிச் செல்லப்பட வேண்டும். | புள்ளிவிபர அறிக்கையொன்று இல்லாமையினால் பதிவேடுகளை நாளதுவரையாகப் பேணிச் செல்லுமாறு அறிவிக்கப்படும். |
| (ii) | மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சின் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதி சுற்றறிக்கையின் மூலம் வீதிகளுக்கு வெளிச்சமிடல் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட ஆலோசனை தொடர்பாக கவனம் செலுத்தாமல் வீதிகளுக்கு வெளிச்சமிடல் நடவடிக்கைகள் அமுல்படுத்தப் பட்டிருந்ததுடன் இது தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை தொடர்பாக கவனம் செலுத்தி இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட வேண்டும். | மின்சாரசபை வழங்குகின்ற ஆலோசனையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பான மெய்மையாய்வு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப் படாதிருந்தமையால் அவ்வாறான அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக பூரணமான இனங்காணலொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது. | விரைவாக அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக பூரணமான மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டும். | மெய்மையாய்விற்காக போதியளவான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை காணப்படாதிருந்ததுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து எதிர்காலத்தில் மெய்மையாய்வு நடவடிக்கைகளைச் செய்து சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | விரைவாக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும் | அனுமதிப்பத்திரத்திற்கு கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதும் அனுமதிப்பத்திரம் கிடைத்திருக்கவில்லை. |
| (எ) (i) | 01 வருடத்திற்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற இனங்காணப்படாத நிலுவையாக இருந்த ஏனைய வருமானம் ரூபா 5,260,292 தொகை மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிட முடியாத தொகையாகக் கருதி கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 01 வருட காலத்திற்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 4,872,912 தொகையான மீதி மீளாய்வாண்டின் போதும், தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதில் தற்போது ரூபா 2,320,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் மிகுதித் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 06 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சியிருந்த 23 ஊழியர்களின் பதவிகள் அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை. | மிகைப்பதவியணி பதவிகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரைத் திருத்துமாறு கோரப்பட்டிருந்ததுடன் தீயணைப்பு படை உத்தியோகத்தர்களை ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பாமல் வைத்துக் கொள்ளல் பொருத்தமானது என அரசியல் அதிகாரத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 122 ஏக்கர் 42 பேர்ச் அளவான 71 காணிக் கூறுகளின் சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான 69 காணிக் கூறுகளுக்கு அளவீட்டு நடவடிக்கைகள் செய்யப்படவில்லை. | சபைக்குரிய காணிகளை அளவீடு செய்து சட்டரீதியான உரித்தை கையேற்க வேண்டும். | உரிய நிறுவனங்களுக்கு அறிவித்து காணியை கையேற்பதற்கும் அளத்தல் நடவடிக்கைகளைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.5 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 15 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்பட வேண்டும். | சில வாகனங்கள் தற்போது எரிபொருள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதி வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொண்டு பூர்த்தி செய்யப்படும். |

**3.6 பெறுகைகள்**

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,500,000 தொகையான சில மூலதன செலவினங்கள் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் பெறுகைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது பாதீடு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது நிர்மாணங்களும் உள்ளடக்கப்படும். |

**3.7 ஒப்பந்த நிர்வாகம்**

**நிறைவேற்றப்படாத இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் மூலதனச் செலவினங்களுக்காக ரூபா 39,500,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதன் போது குறிப்பாக இனங்காணப்பட்ட ரூபா 13,300,000 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியுடைய 07 வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பாக இனங்கண்டு பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட பணிகள் ஆண்டின் போது நிறைவேற்றப்பட வேண்டும். | அரசியல் அதிகாரத்தரப்பினரின் வருகையுடன் நிர்மாணங்களுக்காக வழங்கப்பட்ட முன்னுரிமை வேறுபட்டிருந்தமையால் சில வேலைகள் ஏனைய நிறுவனங்கள் மூலம் மேற்கொள்வதற்கு தீர்மானிக்க முடியாதிருந்தது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்துடனும் செலவினத்துடனும் ஆண்டின் உள்ளபடியான வருமானத்தையும் செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது 04 வருமான விடயங்களில் 36 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையும், 07 செலவின விடயங்களில் 12 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையும் முரண்கள் காணப்பட்டன. | சரியான பாதீடொன்றைத் தயாரித்து அதில் காண்பிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைய வேண்டும். | தற்காலிக மதிப்பீடு செய்வதன் மூலம் வாடகைப் பணத்தை அதிகரித்தல், வியாபார சமூகத்தின் அதிகரிப்பு, கூட்டுப்பசளை விற்பனை குறைவடைதல் மூலம் வருமான விடயங்களிலும், தேசிய பாதீட்டின் மூலம் சம்பள அதிகரிப்பொன்றை எதிர்பார்த்தல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் குறைவடைதல், உபகரணங்கள் நன்கொடையாகக் கிடைத்தல், சில செலவின விடயங்களுக்காக பாதீட்டு மதிப்பீடு செய்யப்படாமை, செலவின விடயங்களின் முரண்பாடுகளுக்கு காரணமாக இருந்தன. |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் செய்யப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகொன்றைத் தாபித்து உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படும். |

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை தாபித்தல் வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று ஆரம்பிக்கப்படும். |